# டிசம்பர் – 22 – வெள்ளி

**புனித கப்பிரினி பிரான்சிஸ் சேவியர்**

**ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். லூக். 1:48**

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 1 : 24 – 28

அந்நாளில் சாவேல் பால்குடி மறந்ததும், அன்னா அவனைத் தூக்கிக் கொண்டு மூன்று காளை, இருபது படி அளவுள்ள ஒரு மரக்கால் மாவு, ஒரு தோல்பை திராட்சை இரசம் ஆகியவற்றுடன் சீலோவிலிருந்து ஆண்டவரின் இல்லத்திற்கு வந்தார், அவன் இன்னும் சிறு பையனாகவே இருந்தான். அவர்கள் காளையைப் பலியிட்ட பின், பையனை ஏலியிடம் கொண்டு வந்தார்கள், பின் அவர் கூறியது. ”என் தலைவரே! உம் மீது ஆணை! என் தலைவரே! உம்முன் நின்று ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டிருந்த பெண் நானே. இப்பையனுக்காகவே நான் வேண்டிக கொண்டேன், நான் ஆண்டவரிடம் விண்ணப்பித்த என் வேண்டு கோளை அவர் கேட்டருளினார், ஆகவே நான் அவனை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறேன், அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே அர்ப்பணிக்கப்பட்டவன், அங்கே அவர்கள் ஆண்டவரைத் தொழுதார்கள்.

**பதில்பாடல் :** என் மீட்பரான ஆண்டவரில் என் இதயம் மகிழ்கிறது

## நற்செய்தி : லூக்கா 1 : 46 - 56

அக்காலத்தில் மரியா பின்வருமாறு கூறினார்: ”ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக் கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலை முறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப் போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணை யினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கை யராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத் தோடு நினைவில் கொண்டுள்ளார். தம் ஊழியராகிய இஸ்ரயே லுக்குத் துணையாக இருந்து வருகிறார்”. மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

**தியானம்:** அன்னை மரியா, புனித எலிசபெத்தோடு “அதிசயமும் ஆச்சரியமும்” மிக்க கர்ப்பம் குறித்து பரவசப்பட்டு “வல்லவராம் கடவுள் எனக்கு அரும் பெரும் செயல் செய்துள்ளார்” என மகிழ்ச்சியும், அக்களிப்பும் மிகுந்து இறை வல்லமையைப் புகழ்ந்து, போற்றிப் பாடுவதனை நாம் காணலாம். இதனை இறையியலாளர்கள் **“Magnificat”** (உன்னதமான பாடல்) என்று கூறுவார்கள். எனினும், எமது வாழ்வில் இறைவன் செய்துவரும் அற்புதமான செயல்களுக்காக, எவ்விதத்தில் நாம் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம் எனவும் சிந்திக்க எம்மை அழைத்து நிற்கின்றன. தனது மகிழ்வைக் கொண்டாட அன்னை மரியா காடு, மலை தாண்டிச் சென்றாள். அன்னை மரியா புகழ்ந்த அதே வார்த்தையான இறைவன் மனுவுரு எடுத்துப் பிறந்த விழாவினை, இன்னமும் மூன்றே நாட்களில் நாமும் கொண்டாட இருக்கின்றோம். அந்த நல்ல செய்தியினை வரவேற்க எந்த நிலையில் நாம் தயாராக இருக்கின்றோம்? தனியாகவும், குடும்பமாகவும் நல்ல ஆத்தும ஆயத்தத்தோடான பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தைப் பெற்றுள்ளோமா? அல்லது வழமைபோல குடி, வெறி களியாட்டங்களுக்கு முன்னுரிமையா? தூய அன்னை போன்று நாம் காடு, மலை தாண்டிப் பாடுபடத் தேவையில்லை. எமது நாட்டில் அல்லலுறும் அப்பாவிகள் துயரநிலையை ஒருசில நிமிடங்கள் நிறுத்தினாலே போதும். அனாதைக் குழந்தைகள், கர்ப்பினிகள், நோயாளிகள், வயோதிபர்கள், வலுவற்றவர்கள், ஏழைகள், வறியவர்கள், ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்குள்ளே தாயகத்தில் வாழும் எமது சகோதர உறவுகளும் இருக்கலாம் அல்லவா? அவ்வாறான கஸ்டமான நிலைகளிலிருந்து எம்மைப் பாதுகாத்த இறைவனைப் போற்றுவோம். அல்லலுறும் மக்களுக்காக இரந்து கண்ணீரோடு வேண்டுதல் செய்வோம். எமது ஆடம்பர செலவீனங்களைக் குறைத்து அப்பாவிகளுக்காக அனுப்பி வைப்போம். இதுவே இத் திருவருகைக் காலத்தில் எமது **“Magnificat”** (உன்னதமான பாடல்) ஆக மாறட்டும். பாருலக மாந்தரது பழிபாவம் தீர்ப்பதற்காய் பலிப்பீடமேறிப் பலிப்பொருளாக்க பரமதிலே வந்துதித்த பரம்பொருளே - ஆமென்